# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

THIRD SEMESTER – **NOVEMBER 2016**

**TL 3501/TL 4500 – NANNOL - I (PAAYIRAMUM EZHUTHUM)**

Date: 04-11-2016 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00-12:00

**பகுதி-அ** (10X2=20 மதிப்பெண்கள்)

**எல்லா வினாக்களுக்கும் 20 சொற்கள் அளவில் விடையளிக்க.**

01. எழுவகை மதங்களாகப் பவணந்தியார் கூறுவன யாவை?
02. சிறப்புப் பாயிரம் செய்வதற்குரியவர் யாவர்?
03. சுட்டெழுத்து - விளக்கம் கூறுக.
04. மாத்திரையின் இலக்கணம் யாது? எழுத்தின் மாத்திரை எவ்வெவ்விடங்களில் குறைந்து ஒலிக்கும்?
05. பதம் என்றால் என்ன? அவை யாவை?
06. ஓரெழுத்து ஒரு மொழிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
07. இயல்பு புணர்ச்சி - விளக்கம் தருக.
08. உடம்படுமெய் எழுத்துகள் யாவை? விளக்கு.
09. பொதுச்சாரியைகள் யாவை?
10. ‘உடன் மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே’ - விளக்கம் தருக.

**பகுதி-ஆ** (5X7=35 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்தனுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. நல்லாசிரியர் இலக்கணம் யாது? அவருக்குக் கூறப்பட்டுள்ள உவமைகளை விளக்கி எழுதுக.
12. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளைப் பட்டியலிட்டுக் காட்டுக.
13. காலம் காட்டும் இடைநிலைகள் குறித்து எழுதுக.
14. ஆகார ஈறு, ஐகார ஈறு பற்றிய செய்திகளைப் பவணந்தியார் உயிரீற்றுப் புணரியலில் எங்ஙனம் கூறியுள்ளார்?
15. ய, ர, ழ ஈற்றுப் புணர்ச்சிகள் குறித்த செய்திகளைக் கூறுக.
16. உருபு புணர்ச்சிக்குரிய சிறப்பு விதிகள் சிலவற்றைக் கூறி விளக்குக.
17. மாணாக்கர் பாடம் கேட்டலின் வரலாறு நன்னூலில் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

**பகுதி-இ** (3X15=45 மதிப்பெண்கள்)

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. நூலின் வகைகளைப் பட்டியலிட்டு, நூலிற்கு அமையும் பத்துவகை அழகுகள், முப்பத்திரண்டு உத்திகள் ஆகியவற்றைப் பற்றி விளக்கி எழுதுக.

    **( அல்லது )**

    முதலெழுத்துகளின் பிறப்பு முயற்சி குறித்து பவணந்தியார் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

19. பகுபத உறுப்புகள் யாவை? அவற்றுள் பகுதி, விகுதி குறித்த செய்திகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

    **( அல்லது )**

    இகர, ஈகார ஈற்றுச் சிறப்புவிதி குறித்த செய்திகள் உயிரீற்றுப் புணரியலில் எங்ஙனம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன?

20. உருபு புணரியலில் பவணந்தியார் குறிப்பிட்டுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

    **( அல்லது )**

    ணகர, னகர ஈற்றுப்புணர்ச்சி விதிகளைச் சான்றுகளுடன் விளக்குக.